## இயல் 7.4 - நேர் மற்றும் எதிர் விகிதங்கள்

பயிற்சி எண் :: 7.4.2.3.B

நேர் எதிர் விகிதங்கள் - பல்வகை திறனறி பயிற்சிக் கணக்குகள் - தநாஅபு - பயிற்சி 4.3.3-4

### நேர் எதிர் விகிதங்கள் - பல்வகை திறனறி பயிற்சிக் கணக்குகள் - தநாஅபு - பயிற்சி 4.3.3-4

3) தமிழ்ச்செல்வன் ₹5,000 -ஐ மூன்று மாதத்திற்கு ஒரு முறை வங்கிக்கணக்கில் சேமித்து வருகிறார். அவர் ₹1,50,000 -ஐ சேமிக்க எத்தனை வருடங்களாகும்?

தமிழ்ச்செல்வன் ₹1,50,000 -ஐ சேமிக்க $x$ வருடங்களாகும் எனக்கொள்க.

| சேமிக்கும் பணம் (₹) | 5000 | 150000 |
|---|---|---|
| மாதங்களின் எண்ணிக்கை | 3 | $x$ |

சேமிக்கும் மொத்தப் பணம் அதிகரிக்கும்போது, சேமிக்க வேண்டிய மாதங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். எனவே, இவை **நேர் விகிதத்தில்** அமைந்துள்ளன.

$$\Longrightarrow \frac{x_1}{y_1} = \frac{x_2}{y_2}$$

$$\frac{5000}{3} = \frac{150000}{x}$$

குறுக்குப்பெருக்கல் செய்க.

$$5000 \times x = 150000 \times 3$$

$$x = \frac{150000\times3}{5000} = \frac{150\cancel{000}\times3}{5\cancel{000}} = \frac{150\times3}{5} = \frac{\overset{30}{\cancel{150}}\times3}{\underset{1}{\cancel{5}}}$$

$$= 30 \times 3 = \boxed{90}$$

$$\begin{array}{r} 7 \\ 12\overline{)90} \\ 84 \\ \hline 6 \end{array}$$

மாதங்களை வருடங்களாக மாற்ற 12 -ஆல் வகுக்க வேண்டும்.

$$\frac{90}{12} = \boxed{\text{7 வருடங்கள் 6 மாதங்கள்}}$$

தமிழ்ச்செல்வன் ₹1,50,000 -ஐ சேமிக்க **7 வருடங்கள் 6 மாதங்கள்** ஆகும்.

4) ஓர் அச்சு இயந்திரம் 300 பக்கங்களைக் கொண்ட ஒரு புத்தகத்தை 1 நிமிடத்தில் 30 பக்கங்கள் என அச்சிடுகிறது. அந்த அச்சு இயந்திரம் அதே புத்தகத்தை 1 நிமிடத்தில் 25 பக்கங்கள் என அச்சிட்டால், அச்சிட்டு முடிக்க எத்தனை நிமிடங்கள் ஆகும்?

புத்தகத்தில் உள்ள பக்கங்களின் எண்ணிக்கை = 300

ஒரு நிமிடத்தில் அச்சிடும் பக்கங்களின் எண்ணிக்கை = 25

அச்சிட்டு முடிக்க எடுத்துக்கொள்ளும் நேரம் $= \frac{300}{25} = \frac{\overset{60}{\cancel{300}}}{\underset{\cancel{25}}{5}}$

$$= \frac{60}{5} = \boxed{\text{12 நிமிடங்கள்}}$$

$$\begin{array}{r} 12 \\ 5\overline{)60} \\ 5 \\ \hline 10 \\ 10 \\ \hline 0 \end{array}$$

அச்சு இயந்திரம் அதே புத்தகத்தை 1 நிமிடத்தில் 25 பக்கங்கள் என அச்சிட்டால், அச்சிட்டு முடிக்க **12 நிமிடங்கள்** ஆகும்.


### Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 21st September, 2022 :: 13:28 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.